மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# குறிஞ்சிப்பாட்டில் 'உவமை' இடைச்சொல்லின் பொருள் ஒப்புமை பயன்பாடு- ஓர் ஆய்வு

# A Study on the Use of Simile Connectives in Kurinjippaatu

Ragani Ramadas / இராகிணி இரமதாசு[1]

Kaaminy Kanapathy / காமினி கணபதி[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

[2]Senior Lecturer, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

Date of Submission: 08-09-2025
Date of Acceptance: 30-10-2025
Date of Publication: 20-12-2025
Corresponding Author's Email: kaaminy@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

குறிஞ்சிப் பாட்டு சங்க கால தமிழ் இலக்கிய நூல். பத்துப்பாட்டில் எட்டாவதாகிய குறிஞ்சிப் பாட்டு 'பெருங்குறிஞ்சி' என்று பெயர் பெற்றதாகும். இதனை இயற்றியவர் கபிலர். குறிஞ்சிப் பாடல் குறிஞ்சித் திணையைப் பற்றிய பாடல். இங்கு குறிஞ்சி என்பது புணர்தலை உரிப்பொருளாகக் கொண்ட திணை. திணை என்பது ஒழுக்கம் நிகழும் இடம். குறிஞ்சியாவது இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுவதாகும். இந்த ஆய்வின் நோக்கமானது குறிஞ்சிப் பாடல்களில் உவமை இடைச்சொல்லைக் கண்டறிவதும் பகுத்தாய்தலும் ஆகும். இஃது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகிறது. மொத்தம் 261 அடிகள் கொண்ட பத்துப்பாட்டில் 33 உவமைகளும் 2 உள்ளுறை உவமங்களும் இடம்பெற்றுள்ளதைக் கண்டறியப்பட்டன. அவற்றில் குறிப்பிட்ட சில பத்துப்பாட்டு வரிகளை இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**கருச்சொல்:** குறிஞ்சிப் பாட்டு, உவமை, உள்ளுறை உவமங்கள், இடைச்சொல். பயன்பாடு

**Abstract**

Kurinjippaatu is a Sangam-era Tamil literary work. In the Pattuppaattu anthology, Kurinjippaatu is the eighth composition, also known as Perunkurinji. It was composed by the poet Kapilar. The poem belongs to the Kurunji thinai (mountain landscape theme). Here, kurinji refers to the thinai (literary landscape) associated with premarital union. A thinai is the contextual setting in which social behaviour occurs. Kurinji specifically deals with natural unions and the circumstances that lead to such unions.

The purpose of this study is to identify and analyse the use of simile particles in Kurinjippaatu. This is a qualitative literary study. Within the total 261 lines of the poem, 33 similes and 2 internal similes were identified. Selected verses from the Pattuppaattu were examined for this research.

**Keywords:** Kurinjippaatu, Simile, Internal Similes, Particles.

## முன்னுரை

## உவமையணி

அணிகளுள் சிறந்தது உவமையணி. புலவன் தான் கூற வந்த கருத்தினைத் தெளிவுபடக் கூறுவதற்கு உவமையைக் கையாண்டான். அக்கருத்தினை அழகுபட எடுத்துரைப்பதற்கும் உவமைப் பயன்படுத்தப்பட்டது. இக்குறிஞ்சிப் பாட்டில் முப்பத்து மூன்று உவமைகளும் இரண்டு உள்ளுறை உவமங்களும் இடம்பெற்றுள்ளன. ஆக, இவ்வாய்வின் நோக்கம் குறிஞ்சிப் பாட்டில் உவமை நயம் குறித்து ஆராய்வதேயாகும்.

## ஆய்வு நோக்கம்

புலவர் கபிலர் இயற்றிய பத்துப்பாட்டான குறிஞ்சிப் பாடல் வரிகளில் உவமையணி பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும்.

## ஆய்வு வரையறை

பத்துப்பாட்டான குறிஞ்சிப் பாடலில் உள்ள 261 அடிகளில் இடம்பெற்றுள்ள உவமையணிகள் முறையே கண்டறியப்பட்டுள்ளன. பின் கண்டறியப்பட்ட பாடல் வரிகளில் குறிப்பிட்ட 33 வரிகளில் உவமையணிகள் அடையாளங்கண்டு பகுப்பாய்வு செய்யும் வகையில் இவ்வாய்வின் வரையறை வரையறுக்கப்பட்டன. இவ்வாய்வுக்குப் புலவர் கா. கோவிந்தனார் இயற்றிய, **சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலவும் உரையும்** எனும் நூல் முதன்மை நூலாகப் பயன்படுத்தப்பட்டது.

## ஆய்வின் மீள்நோக்கு

பத்துப்பாட்டு குறிஞ்சிப் பாட்டில் ‘உவமையணி’ பொருள் ஒப்புமை பயன்பாடு – ஓர் ஆய்வு எனும் தலைப்பில் இதற்கு முன்பு ஆய்வுகள் மேற்கொள்ளவில்லை. மாறாக, **அழகியல் நோக்கில் குறிஞ்சிப் பாட்டு மா. கல்பனா(2022)** என்பவர் சங்க இலக்கியங்கள் மனித வாழ்க்கை அகம், புறம் எனப் அக வாழ்க்கையை அகப் பாடலும், புற வாழ்க்கையைப் புறப்பாடல்களும் எடுத்துரைப்பதாக குறிஞ்சிப் பாடல்களைக் கொண்டு எழுதியுள்ளார். அவரைத் தொடர்ந்து, **குறிஞ்சிப் பாட்டின் கருத்தாடல், முனைவர் மு சங்கர்(2020)** என்பவர் கருத்தாடல் பகுப்பாய்வில் உள்ள அலகுகள் பற்றிய (விளக்கத்தில் சூழலின் பங்கு, சூழலின் சூழல், விரிவடையும் சூழல், உள்ளடக்கம், தகவல் அமைப்பு, ஒத்திசைவு/ இணக்கம்,) என குறிஞ்சிப் பாட்டு எழுத்து வழியில் பனுவலாக இருப்பதைக் கொண்டு இவற்றைப் பொருத்திப் பார்க்கும் முயற்சியின் இவண் ஆய்வு மேற்கொண்டுள்ளார். தவிர, **குறிஞ்சிப் பாட்டில் அடிக்கருத்தியல் கோட்பாட்டு அணுகுமுறை இரா. ஜெயசங்கர்(2022)** என்பவர் ஒப்பிலக்கிய அறிஞர் பிராவர், உலக இலக்கியம் முழுமைக்கும் பொதுவாக அமைக்கக்கூடிய ஐந்து அடிக்கருத்துக்களை ஆராய்ந்து கூறியதைக் கொண்டு குறிஞ்சி பாடலைக் கொண்டு ஆய்வினையை மேற்கொண்டுள்ளார். ஆகவே, ஆய்வாளரின் இவ்வாய்வு முன்னாய்வுகளோடு வேறுபடுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாடலில் ‘உவமையணி’ அணியியல் இலக்கணத்தின் பயன்பாட்டினை ஆராய்வதால் இது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகிறது. இது பகுப்பாய்வு விளக்க முறையில் இருப்பதாலும் இதை விளக்கமுறை ஆய்வாகவும் கொள்ளலாம். இந்த ஆய்வில் 2 பண்புசார் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாக, நூலகப் பகுப்பாய்வு முறை. குறிஞ்சிப் பத்துப்பாடலில் ‘உவமையணி’ ஆராய்வதால், இதில் நூல் பகுப்பாய்வு முறை கையாளப்பட்டுள்ளது. இரண்டாவதாக, குறிஞ்சிப் பத்துப்பாடல்களை ஆழமாக ஆராய்வதன் வழி உள்ளடக்க பகுப்பாய்வு முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஆய்வாளர் நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணைய பதிவுகள் முதலானவற்றைத் தரவுக்கான மூலங்களாகப் பயன்படுத்தியுள்ளார்.

அவற்றின் கண்டுபிடிப்புகளை மையமாக வைத்து குறிஞ்சிப் பாடலில் ‘உவமை’ இடைச்சொல் இலக்கணத்தின் பயன்பாட்டினை விவாதித்துள்ளார்.

**ஆய்வுக் கண்டுப்பிடிப்பும் கலந்துரையாடலும்**

குறிஞ்சி காதலர்கள் கூடுவது. குறிஞ்சி களவொழுக்கத்தின் நிலையினை எடுத்தியம்புவது. தலைவன் தலைவியைக் களவொழுக்கத்தில் கூடுவது. தலைவன் வரும் வழியிலுள்ள இடர்பாடுகள் இவற்றை நினைத்து தலைவியின் உள்ளம் கலங்குகின்றது. இக்களவொழுக்கத்தினைப் பெற்றோர்களுக்குக் கூறி மணத்திற்கு ஏற்பாடு செய்யும் எண்ணம் தோன்றுகிறது. ஆகவே, அறத்தோடு நிற்கும் நிலை உருவாகிறது. செவிலித் தாய்க்கு அறத்தோடு நின்று தலைவியின் நிலையினைத் தோழி எடுத்தியம்புகிறாள்.

களவொழுக்கத்தினைச் செவிலித் தவறாக எண்ணாதபடி தலைவியின் நிலையினையும் தலைவன் தலைவியின் அன்பினையும் வெளிப்படுத்துவாள் தோழி. தினைப்புனம் காப்பதற்காகத் தோழியும் தலைவியும் சென்றதிலிருந்து தோழி கூறத் தொடங்குகின்றாள்.

குறிஞ்சியில் 99 வகையான மலர்களின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளது. கடவுளை முன்நிறுத்தி வஞ்சினம் உரைத்தல், தண்ணீரைக் குடித்து சூளுரைத்தல், நோய் நீக்கப் பரவியும் தொழுதும் வழிபாடு இயற்றுதல் ஆகிய மரபுச் செய்திகள் எடுத்தாளப்பட்டுள்ளன. தவிர செவிலித்தாயின் மனநிலை, தலைவியின் ஆற்றாமை, தோழியின் அறிவுத் திறம், தலைவனின் பண்பு ஆகியனவற்றை குறிஞ்சிப் பாடலில் விரிவாக விளக்கி அமைகின்றது.

**உவமை நயம்**

தலைவியின் நோக்கு, மானின் பார்வையோடு ஒப்புமைப்படுத்தி காட்டப்படுகிறது.

**மான் அமர் நோக்கம் (25)**

மான் போலும் விரும்பத்தக்க பார்வையுடையவள் என்றும்

**பிணைஏர் நோக்கின் மனையோள் மடுப்ப (154)**

பெண் மானின் விழி போன்ற விழியினை உடையவள் என்றும் உவமைச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தலைவியும் தோழியும் அருவியிலும் சுனையிலும் நீர் விட்டு எழுந்து வரும்போது பொன்னிறமான முதுகில் நனைந்த கூந்தல் படிந்து கிடப்பதனை..

**பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம்**

**பின் இருங் கூந்தல் (59-60)**

என்று உவமைப்படுத்தப்படுகின்றது.

தலைவியின் கண்கள் பெருமையும் மதர்ப்பும் குளிர்ச்சியும் உடையன. அவை சோர்ந்து கலங்கி அழுவதவண்ணம் இருப்பதனை மழைநீரால் தாக்கப்பட்ட மலர் அழகழிந்து இதழ் சோர்ந்து, நீர் சிந்தி நிற்பதை உவமையாகக் காட்டுகிறார்.

**நீர்எறி மலரின் சாஅய், இதழ் சோரா**

**ஈரிய கலுழும், இவள் பெருமதர் மழைக்கண் (247-248)**

யாழ் இசைக்கு வண்டினது ஒலி உவமையாக இலக்கியங்கள் காட்டுவது வழக்காகும். அழகு மிக்க வரிகளையுடைய மிஞிறு என்னும் வண்டு யாழ் இசைப் போல (110) ஆரவாரிக்கின்றது என்று குறிஞ்சிப்பாட்டும் முன்வைக்கின்றது. மேலும்,

**நைவளம் பழநிய பாலை வல்லோன்**

**கைவர் நரம்பின் இம்மென இமிரும்**

**மாதர் வண்டொடு, சுரும்பு நயந்து உறுத்த (146-148)**

எனும் வரிகள், பெண் வண்டினுடைய ஓசை யாழிசைப் போன்றது என்று இங்கு வரையறுத்துக் கூறுப்படுகின்றது.

மதங் கொண்ட யானையின் பிளிறலை கார்கால மழையுடன் கூடிவரும் பேரிடியோடு ஒப்பிட்டுக் காட்டியிருப்பது இங்குச் சிறப்பிற்குரியது.

**கார்ப்பெயல் உருமின் பிளறி, சீர்த்தக**

**இரும்பிணர்த் தடக்கை(162-163)**

யானை மீது தலைவன் எய்த அம்புப்பட்டுக் குருதி சிதறிக் கறைபடிந்து இருக்குமிடம் முருகனால் நோயுற்ற பெண்களுக்கு, அந்நோய் தீர மறி அறுத்து வெறியாட்டெடுக்கும் களம் போலக் காட்சியளித்ததை ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார் புலவர்.

**அணங்குற மகளிர் ஆடுகளம் கடுப்ப (175)**

மலைமேல் விளையாடும் மகளிரால், கீழே செங்காந்தட் பூக்கள் உதிர்ந்து கிடக்குமிடம் கம்பளம் விரிக்கப்பட்ட விழாக் களம் போலத் தோற்றமளிக்கின்றது எனும் ஒப்புமை, புலவரின் கற்பனைக்குக் காட்சியமாய் திகழ்கின்றது.

**முழுமுதற் கொக்கின் தீம் கனி உதிர்ந்தென (188)**

தலைவன் இரவுதோறும் தன்னைச் சந்திக்க வருவதால், அவனுக்கு வரும்வழியில் ஏதேனும் துன்பம் நேருமோ எனத் தலைவி நினைத்து நினைத்து அழுது நைவதை வலையிலகப்பட்ட மயில் தன் அழகுகெட்டு வாடுவதுபோல வாடுகிறாள் என உவமைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

**வலைப்படு மஞ்ஞையில், நலம் செலர் சாஅய்**

**நினைந்தோறும் கலுழுமால் இவளே (250-251)**

**நெற் கொள் நெடுவெதிற்கு அணந்த யானை**

**முத்து ஆர் மருப்பின் இறங்க கை கடுப்ப**

**துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்**

**நல்கோட் சிறுதினை (35-38)**

தினைக்கதிர் முற்றி வளர்ந்து, தலைவணங்கி நிற்கும் காட்சி, நெல் விளைந்த நீண்ட மூங்கிலை வளைத்துத் தின்பதற்காக நெடுநேரம் அண்ணாந்து நின்ற யானை, முத்து நிறைந்து முற்றிய தன் கொம்பிலே துதிக்கையை இறக்கிப் போட்டிருப்பது போல உவமைப்படுத்துகிறார் கபிலர்.

**நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத் திரை**

**அடும்கரை வாழையின் நடுங்க (178-179)**

எனும் வரிகளின் வழி, நுரை பெருக வெள்ளம் பாயும்போது அதன் வலிமைமிக்க அலைகள் தாக்குவதால், கரை இடிந்து விழுவதுபோல அக்கரையில் நிற்கும் வாழை மரம் போலத் தலைவி நடுங்குகிறாள் என்று உவமைப்படுத்துகிறார்.

தோழியின் நிலையினை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையினோடு ஒப்பிட்டுக் கூறுவதனைக் காணலாம்.

**இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்**

**வினையிடை நின்ற சான்றோர் போல**

**இருபேர் அச்சமோடு யானும் ஆற்றலென் (27-29)**

பகைமையைப் பெருக்கும் இரண்டு பெரிய வேந்தர்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்படுத்த முயலும் சான்றோர்கள் இருவரும் தம்மைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாதே என்று அஞ்சி வருந்துவது போல, தோழி தானும் வருந்துவதாகக் கூறுகிறாள்.

உட்கருத்து அமைய உவமைக் கூறுவதை உள்ளுறை உவமம் என்பர். தலைவன் தலைவையை நோக்கி, **'நினது அழகிய நலத்தை நான் நுகர்வேன்',** என்று கூறுகிறாள். இவ்விடத்தில் தோழி செவிலித்தாயிடம் கூறாமல் உட்பொருள் அமைய முன்னிறுத்துவது உள்ளுறை உவமக் காட்சி எனலாம்.

மலை மீதுள்ள சுனையில் மாங்கனி, பலாக்கனிகள் உதிர்ந்து அதைல் சிதறிய தேனுடல் கலந்து மதுவாக உள்ளது. அதனை மது என்று கருதாமல் நீர் என்று நினைத்து அருந்திய மயில் தளர்ந்து ஆடுகிறது என்றும், மலையுச்சியால் மகளிர் ஆடுவதால் உதிர்க்கப்பட்டு கீழே பரவிக் கிடக்கும் செங்காந்தட் பூக்கள் கம்பளம் விரித்த களம் போலக் காட்சியளித்தது என்றும் கூறி இதன் வழி தலைவனும் தலைவியும் மனங் கலந்து தழுவி மகிழ்ந்து மயங்கினர் என்பதும் உயர்ந்த குடியில் பிறந்த தலைவன் தலைவியோடு கூடி அழகு பொருந்தச் செய்தான் என்பதும் உட்பொருளாகச் செவிலி விளங்கும்படி எடுத்துரைக்கப்படுகின்றது.

**முடிவுரை**

குறிஞ்சிப்பாட்டு அறத்தோடு நிற்றலையும் ஒழுக்கத்தியுமே முதன்மையாகக் கொண்டுள்ளது. குறிஞ்சி இலக்கியம் உவமை நயம், மலர்க் குறியீடு, உளவியல் கூறுகள் என இன்னும் பல்வேறு சிறப்புகளை ஆய்வுக்கும் ஆராய்ச்சிக்குமே நிறைந்து வைத்துள்ளது. ஒவ்வொரு முறையும் குறிஞ்சிப் பாடல்களை வாசிக்கப் பல்வேறு சிறப்புகளையும் சிந்தனைகளையும் வாசகர்களுக்குக் குறைவில்லா அறத்தையும் ஒழுக்கத்தையும் அள்ளித் தருகின்றது. களவியலுரைகாரர் கூறுவதுபோல குறிஞ்சி,

‘விளக்காகிய சுடரிந்த இடமே விளக்கெனப் பட்டதுபோல, குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சியெனப்பட்டது’ என்பார். ஆக, “குறிஞ்சி”, சுருங்கக் கூறின், “புணர்தல்”,. காதலர் கூடும் களவொழுக்கத்தின் நிலையை எடுத்தியம்புவது.

**துணைநூற்பட்டியல்**

சண்முகம், செ. (2002). கருத்தாடல் கருவும் உருவும் (முதற் பதிப்பு). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

நாகராசன், வி. (உ.ஆ.). (2007). பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூன்றாம் அச்சு). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

மாணிக்கவாசகன், ஞா. (2002). பத்துப்பாட்டு மூலம் விளக்கவுரை. சென்னை: உமா பதிப்பகம்.

கதிரேசன், கி. (2006). எளிய தமிழில் பத்துப்பாட்டு. சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.

இரா. குருநாதன், டாக்டர். (1992). சிறுபாணாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு தெளிவுரை. சென்னை: அநுராகம் பதிப்பகம்.